கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

முன்னிலை**:** திரு**.**ஜி**.**சரண்**,B.L., P.G.Dip.in Env.Law.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் (முழு கூடுதல் பொறுப்பு)

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை.

இடைக்கால மனு எண்**.04/2024**
மற்றும்
இடைக்கால மனு எண்**.05/2024**
**-**உள்**-**
அசல் வழக்கு எண்.332/2022

இடைக்கால மனு எண்**.04/2024**

M.வெங்கடேசன் ...மனுதாரர்/பிரதிவாதி.

...எதிர்..

பி.கோவிந்தராஜ் ...எதிர்மனுதாரர்/வாதி.

இடைக்கால மனு எண்**.05/2024 -**

M.வெங்கடேசன் ...மனுதாரர்/பிரதிவாதி.

...எதிர்..

பி.கோவிந்தராஜ் ...எதிர்மனுதாரர்/வாதி.

மேற்கண்ட இரண்டு இடைக்கால மனுக்களும் கடந்த 7.03.2025ம் தேதியன்று இந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது இரண்டு மனுக்களின் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் ஆர்.முருகேஷ் மற்றம் அ.விஜய்பானு ஆகியோர்கள் முன்னிலையாகியும், இரண்டு மனுக்களின் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.வி.பஞ்சாட்சரம் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இரண்டு மனுக்களிலும் இன்று இந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்

பொதுவான உத்தரவு

1. இடைக்கால மனு எண்**.04/2024**

இம்மனுவானது மனுதாரர்/பிரதிவாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அசல் வழக்கில் மனுதாரர்/பிரதிவாதியை எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள அசல் வழக்கினை மறுதிறவு செய்து உத்தரவிடக்கோருகிறார்.

2. இடைக்கால மனு எண்.**05/2024**

இம்மனுவானது மனுதாரர்/பிரதிவாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆணை 18, விதி 17 மற்றும் பிரிவு 151ன்கீழ் தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டுள்ள அசல் வழக்கினை மனுதாரர்/பிரதிவாதியை எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு ஏதுவாக மனுதாரர்/பிரதிவாதியை மீண்டும் அழைக்க உத்தரவிடக்கோருகிறார்.

3. மேற்கண்ட இரண்டு மனுக்களின் பொதுவான சுருக்கம் பின்வருமாறு :

இந்த மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதார் அசல் வழக்கில் வாதி. எதிர்மனுதாரர்/வாதி இம்மனுதாரருக்கு எதிராக தாவா வழக்கில் கண்ட தொகையை வட்டியுடன் வசூல் செய்துதரக்கோரி தாக்கல் செய்துள்ளார். அதில் இம்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, உரிய முறையில் எதிர்வாதம் செய்து நடத்தி வருகின்றார். தாவா வழக்கில் எதிர்மனுதார் /வாதி தரப்பு விசாரணை முடிந்து பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு இந்த மனுதாரர் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, இந்த மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 18.9.2024ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்தது. இந்நிலையில் இம்மனுதாரர் குறுக்கு விசாரணைக்கு ஆஜராக தயாராகவே இருந்து வந்ததில் இந்த மனுதாரரின் மூத்த அதிகாரி அவர்களின் அலுவலகத்தில் இருந்து மேற்படி 18.9.2024 ம் தேதியில் வர இருப்பதாகவும், அதனால் அன்றைய தினம் அலுவலகத்தில் அவசியம் இருக்க வேண்டுமென்று கடிதம் அனுப்பப்பட்டிருந்ததனால் மேற்படி தேதியில் விடுமுறை எடுத்துக்கொண்ட நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போய்விட்டது. இந்நிலையில் இந்த மனுதார் 18.09.2024ம் தேதி ஆஜராகாத காரணத்தினால் இந்த மனுதாரர் தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு தாவா வழக்கு வாதுரைக்காக 26.09.2024ம் தேதி வாய்தா போடப்பட்டு,Aruments heard என தீர்ப்புரைக்காக 16.10.2024ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி 18.09.2024ம் தேதிய தவறுகை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும். எதிர்மனுதார் /வாதி தரப்பில் இன்னும் இந்த மனுதாரர் குறுக்கு விசாரணைசெய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்/வாதி தாப்பில் இந்த மனுதாரரை குறுக்கு விசாரணை செய்தால் தான் தாவா வழக்கு முழுமையடையும். ஆகையால் எதிர்மனுதார்/வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு எதுவாக தரவா வழக்கு தீர்ப்புக்காக வாய்தா போடப்பட்டுள்ளதை மறுதிறவு செய்யவும், இந்த மனுதாரர்/பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய மீண்டும் அழைக்கவும் உத்தரவிடக்கோரி இவ்விரு மனுக்களும் தாக்கல். அவ்வாறு இந்த மனுக்கள் அனுமதிக்கப்படவில்லை எனில்

இந்த மனுதாரருக்கு பெருத்த கஷ்டம் நஷ்டம் ஏற்பட்டு விடும். மேலும் இந்த மனுவை அனுமதிப்பதில் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித குந்தகமும் ஏற்படப்போவதில்லை.

4. இவ்விரு மனுக்களிலும் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரைகளின் பொதுவான சுருக்கம் பின்வருமாறு :

எதிர்மனுதாரர் இந்த அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானது என ஆட்சேபிக்கப்படுகிறது. முன்னதாக மேற்கண்ட அசல் வழக்கில் இந்த மனுதாரர் ஆஜராகாததால் ஒருதலைப்பட்சு உத்தரவானது 19.10.2022ம் தேதி பிறப்பிக்கப்பட்டதில் இந்த மனுதாரர்/பிரதிவாதி ஒருதலைப்பட்சு உத்தரவை ரத்து செய்ய மனு செய்து அம்மனு 21.3.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டது. பின்னிட்டு 23.1.2024ம் தேதி வாதி தரப்பு சாட்சியம் விசாரிக்கப்பட்டு 4 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது பின்னிட்டு இந்த எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய 21.2.2024ம் தேதி வாய்தா போடப்பட்டு 7.6.2024ம் தேதி இந்த எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் நிரூபண வாக்குமூலமானது 11.6.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 3.9.2024ம் தேதி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு 18.9.2024ம் தேதி குறுக்குவிசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்ததில் இந்த மனுதாரர்/பிரதிவாதியின் ஆஜரின்மை காரணமாக பிரதிவாதி தரப்பு சாட்சியம் கட்டளை 17 விதி 2 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின்படி முடிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் இம்மனுவின் மனுதாரர் தன் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய தீர்ப்புக்காக போடப்பட்டுள்ள வழக்கினை மறுதிறவு செய்து குறுக்குவிசாரணை செய்யவேண்டுமென்று கோருவது நிலைக்கத்தக்கதல்ல. இதுகுறித்து இம்மனுதாரர் சீராய்வுதான் தாக்கல் செய்யவேண்டும். எனவே இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும். ஒருவேளை இம்மனுவினை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்தால் மனுதாரர்/பிரதிவாதியை அவர் தரப்பு நல்லெண்ணத்தை நிரூபிக்க தாவா தொகையில் 50%த்தை இந்நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய கோரவேண்டியது அவசியமாகிறது.

5. இரு தரப்பும் கேட்கப்பட்டது. இனி இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டியது இந்த மனு அனுமதிக்கத்தக்கதா**?** இல்லையா?என்பதேயாகும்.

6. இந்த இரண்டு மனுக்களில் இ.மனு எண்-4/2024 உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன்படியும், இ.மனு எண்-5/2024 கட்டளை 18 விதி 17மற்றும் பிரிவு 151ன் கீழும் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

7. இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், எதிர்மனுதார்/வாதி இம்மனுதாரருக்கு எதிராக தாவா வழக்கில் கண்ட தொகையை வட்டியுடன் வசூல் செய்துதரக்கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் இம்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, உரிய முறையில் எதிர்வாதம் செய்து தாவா வழக்கில் எதிர்மனுதார்/வாதி தரப்பு விசாரணை முடிந்து பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு இந்த மனுதாரர் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, இந்த மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 18.9.2024ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், இந்நிலையில் இம்மனுதாரர் குறுக்கு விசாரணைக்கு ஆஜராக தயாராக இருந்து வந்ததில் இந்த மனுதாரரின் மூத்த அதிகாரி அவர்களின் அலுவலகத்தில் இருந்து மேற்படி 18.9.2024 ம் தேதியில் வர இருப்பதால் அன்றைய தினம் அலுவலகத்தில் அவசியம் இருக்க வேண்டுமென்று கடிதம் அனுப்பப்பட்டிருந்ததாகவும் ஆகையால் மேற்படி தேதியில் விடுமுறை எடுத்துக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போய்விட்டதென்றும் இந்நிலையில் இந்த மனுதார் 18.09.2024ம் தேதி ஆஜராகாத காரணத்தினால் இந்த மனுதாரர் தரப்பில் சாட்சி முடிக்கப்பட்டு தாவா வழக்கு வாதுரைக்காக 26.09.2024ம் தேதி வாய்தா போடப்பட்டு Aruments heard என தீர்ப்புரைக்காக 16.10.2024ம் தேதி வாய்தா போடப்பட்டது என்றும் மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும் எனவும், எதிர்மனுதார் /வாதி தரப்பில் இன்னும் இந்த மனுதாரர் குறுக்கு விசாரணை செய்யப்படாததால் எதிர்மனுதாரர்/வாதி தாப்பில் இந்த மனுதாரரை குறுக்கு விசாரணை செய்தால்தான் தாவா வழக்கு முழுமையடையும் என்றும், ஆகையால் எதிர்மனுதார்/வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்கு எதுவாக தாவா வழக்கு தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளதை மறுதிறவு செய்யவும் இந்த மனுதாரர் / பிரதிவாதியை மிண்டும் அழைக்கவும் இவ்விரு மனுக்களும் தாக்கல் செய்துள்ளதாக வாதிடப்பட்டது.

8. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு புறம்பானது என்றும் முன்னதாக மேற்கண்ட அசல் வழக்கில் இந்த மனுதாரர் ஆஜராகாததால் ஒருதலைப்பட்ச உத்தரவானது 19.10.2022ம் தேதி பிறப்பிக்கப்பட்டதில் இந்த மனுதாரர்/ பிரதிவாதி ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய மனு செய்து அம்மனு 21.3.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டதென்றும் பின்னிட்டு 23.1.2024ம் தேதி வாதி தரப்பு சாட்சியம் விசாரிக்கப்பட்டு 4 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது, இந்த எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்ய 21.2.2024ம் தேதி வாய்தா போடப்பட்டு, கடந்த 7.6.2024ம் தேதி இந்த

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் நிரூபண வாக்குமூலமானது 11.6.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, 3.9.2024ம் தேதி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு 18.9.2024ம் தேதி குறுக்குவிசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்ததில் இந்த மனுதாரர்/பிரதிவாதியின் ஆஜரின்மை காரணமாக பிரதிவாதி தரப்பு சாட்சியம் கட்டளை 17 விதி 2 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின்படி முடிக்கப்பட்டுவிட்டதென்றும், இந்நிலையில் இம்மனுவின் மனுதாரர் தன் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவேண்டியது மிகவும் அவசியமானதென்றும் எனவே தீர்ப்புக்காக போடப்பட்டுள்ள வழக்கினை மறுதிறவு செய்யவும் அதற்காக பிரதிவாதி தரப்பு சாட்சியை மீண்டும் அழைக்கவும் உத்தரவிடக் கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்றும், இதுகுறித்து இம்மனுதாரர் சீராய்வுதான் தாக்கல் செய்யவேண்டுமென்றும் வாதம் முன்வைக்கப்பட்டது.

9. வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும் போது, இந்த அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பினை குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 18.09.2024ம் வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்/பிரதிவாதி தன்னை குறுக்கு விசாரணைக்கு உட்படுத்திக்கொள்ளாததால் அன்றையதினம் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 17 விதி 2 -ன்படி பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, வாதுரைக்காக வாய்தா இடப்பட்டு பின்னிட்டு தீர்ப்புரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளதை காணமுடிகின்றது. தன்னை குறுக்கு விசரணை செய்ய போடப்பட்ட வாய்தா தேதியான 18.9.2024ம் தேதி மனுதாரரின் மூத்த அதிகாரி அவர்களின் அலுவலகத்தில் இருந்து மேற்படி 18.9.2024 ம் தேதியில் வர இருந்ததால் அன்றைய தினம் அலுவலகத்தில் அவசியம் இருக்க வேண்டுமென்று கடிதம் அனுப்பப்பட்டிருந்ததாகவும் ஆகையால்தான் தன்னால் மேற்படி தேதியில் விடுமுறை எடுத்துக்கொண்டு நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போய்விட்டதென்றும் இந்நிலையில் இந்த மனுதாரர் 18.09.2024ம் தேதி ஆஜராகாத காரணத்தினால் இந்த மனுதாரர் தரப்பில் சாட்சி முடிக்கப்பட்டு தாவா வழக்கு வாதுரைக்காக 26.09.2024ம் தேதி வாய்தா போடப்பட்டு Aruments heard என தீர்ப்புரைக்காக 16.10.2024ம்தேதி வாய்தா போடப்பட்டது என்றும் இந்நிலையில் எதிர்மனுதார் வாதி தரப்பில் இன்னும் இந்த மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டால்தான் வழக்கு முழுமையடையும் என்றும் மேற்படி தவறுவேண்டுமென்றே ஏற்பட்டதல்ல தெய்வாதீனமாக ஏற்பட்டதென்றும் எனவே தீர்ப்புரைக்காக வாய்தா இடப்பட்டுள்ள வழக்கை மறுதிறவு செய்யவேண்டுமென்றம் தன் தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவேண்டுமென்றும் கோருவதை காணமுடிகின்றது. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுக்களை அனுமதிக்க ஆட்சேபித்து

காரணங்கள் சொல்லப்பட்டிருப்பினும் அவை இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித குந்தகமும் ஏற்படுவதாக காணப்படவில்லை. இந்நிலையில் இந்த அசல் வழக்கின் தன்மை சூழ்நிலைகளையும், இந்த அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை நடைபெறாமல் உள்ளதையும் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, மனுதாரர்/பிரதிவாதிக்கு தனது தரப்பு வழக்கினை எடுத்துரைக்க ஒரு சந்தர்ப்பம் அளிக்க வழக்கினை மறுதிறவு செய்து பிரதிவாதி தரப்பினை குறுக்கு விசாரணைக்கு அழைப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேவேளையில் இந்த மனுவினால் இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்டிருக்கும் மனஉளைச்சலை ஈடுகட்டும் பொருட்டு இம்மனுக்களை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இடைநிலை மனு எண் **4/2024 :-**

முடிவாக, மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/-ஐ செலவுத்தொகையாக மூன்று நாட்களில் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், அவ்வாறு மூன்று நாட்களுக்குள் மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/ வாதிக்கு செலவுத் தொகையை செலுத்தாதபட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 19.03.2025.

இடைநிலை மனு எண் **5/2024 :-**

முடிவாக, மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதிக்கு ரூ.500/-ஐ செலவுத்தொகையாக மூன்று நாட்களில் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், அவ்வாறு மூன்று நாட்களுக்குள் மனுதாரர்/பிரதிவாதி, எதிர்மனுதாரர்/ வாதிக்கு செலவுத் தொகையை செலுத்தாதபட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 19.03.2025.

இந்த பொதுவான உத்தரவானது சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14- ஆம் நாளான இன்று திறந்த மன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/-திரு.ஜி.சரண்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.
(முழு கூடுதல் பொறுப்பு).

<u>மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:

-இரண்டு மனுக்களிலும் முன்னிடப்படவில்லை-

<u>எதிர்மனுதாரர்/வாதி  தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:</u>

-இரண்டு மனுக்களிலும் முன்னிடப்படவில்லை-

ஒம்/-திரு.ஜி.சரண்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
திண்டுக்கல்.
(முழு கூடுதல் பொறுப்பு).